# கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக்குறித்த இந்த சத்தியம் மிகவும் முக்கியமானது. கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்கிற சத்தியம்தான் கிறிஸ்தவர்களுடைய அடிநாதமாக இருக்கிறது. கிறிஸ்தவம் வீழ்ச்சி அடையாமல் தழைத்து ஓங்குவதும் நிலை நிற்பதும் இந்த சத்தியத்தை சார்ந்தே இருக்கிறது. கிறிஸ்தவ விசுவாசத்தை ஊன்ற கட்டி விசுவாசிகளுக்கு ஆறுதலையும் உறுதியான நம்பிக்கையையும் ஊட்டுவது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலே ஆகும்.

## 1. உயிர்த்தெழுதலை குறித்த வேதாகம போதனை

### a. உயிர்த்தெழுதல் இயற்கையில்

வேதாகமத்தில் எந்த ஒரு சத்தியத்தையும் தேவன் மிக எளிமையாக ஏதோ ஒரு வகையிலே காட்சிப்படுத்துகிறார்; மனிதர்கள் மூலமாகவோ இயற்கையின் மூலமாகவோ வரலாற்று நிகழ்வுகளின் மூலமாகவோ பொருட்களின் மூலமாகவோ இப்படி பலவாறாக ஆண்டவர் தமது சத்தியங்களை ஏதோ ஒரு வகையிலே காட்சிப்படுத்துகிறார். உயிர்த்தெழுதலைப் பற்றி இயற்கையின் மூலமாக தேவன் நமக்கு காட்சிப்படுத்தியிருக்கிற விதங்கள்.

- இலையுதிர் காலத்தில் மரங்கள் தங்களுடைய இலைகளை உதிர்த்து வெறும் குச்சியும் கொப்புமாக காட்சி தரும்; பார்ப்பதற்கு அந்த மரம் பட்டுப்போனது போன்ற தோற்றம் இருக்கும்; ஆயினும் வசந்த காலத்தில் அதே மரம் மீண்டும் துளிர்த்து பசுமை பூத்து பூக்களெல்லாம் பூக்கத் தொடங்கி காய்த்து கனி தந்து அது தன்னுடைய அந்த வசந்த காலத்தினுடைய எழிலை வெளிப்படுத்தும். அதுபோலவே மனிதனுடைய வாழ்க்கையிலும் மரணத்திற்கு பிறகு ஒரு மகிழ்ச்சியான ஜீவன் (நித்தியஜீவன்) உண்டு (அ) ஒரு நம்பிக்கை உண்டு என்பதை ஆண்டவர் வெளிப்படுத்தியிருக்கிறார்.
- ஒரு கூட்டுப்புழு ஒன்று அதனுடைய கூட்டுக்குள்ளே போய் தன்னை மறைத்துக் கொண்டு செத்துப்போய்விட்டதுபோல காணப்பட்டு அந்த இருட்டு அறையிலிருந்து வெளிவரும்பொழுது அழகிய வண்ணத்துப்பூச்சியாக வெளிவருவதையும் இயற்கையின் மூலமாக நமக்கு காட்சிப்படுத்தியிருக்கிறார்.
- ஒரு விதையானது மண்ணில் புதைக்கப்பட்டு, அந்த விதையானது மரித்து, அதற்குப் பிற்பாடுதான் முளைக்கிறது.

எனவே உயிர்த்தெழுதல் என்பது ஏற்கனவே இயற்கையில் காட்டப்பட்ட ஒன்றுதான்.

### b. உயிர்த்தெழுதல் பழைய ஏற்பாட்டு நிகழ்வுகளில்

- ஜலப்பிரளயத்திற்கு பிறகு மீண்டுமாக பேழைக்குள் காக்கப்பட்ட உயிரினங்கள் மூலமாக மீண்டும் உயிரினங்கள் தோன்றி இந்த உலகிலே உயிரியல் சூழல் உருவானது; அதை ஒரு மீள்தொடக்கமாக நாம் பார்க்கலாம். இது போல ஆண்டவர் அவ்வப்போது நம்பிக்கையின் செய்திகள் மூலமாக மீண்டும் உயிர் வாழ்வதற்கான ஆதாரங்களை நமக்கு முன்வைக்கிறார்.

- <u>யோசேப்பு பற்றிய நம்பிக்கை:</u> யோசேப்பு உண்மையிலேயே சாகவில்லை ஆனால் யோசேப்பை பற்றி அவனுடைய சகோதரர்கள் சொன்னபோது (ஆதி 37:33 – யாக்கோபு... ஒரு துஷ்டமிருகம் அவனைப் பட்சித்துப் போட்டது, யோசேப்பு பீறுண்டுபோனான் என்று புலம்பினான்). அநேக வருடம் கழித்து யோசேப்பு உயிரோடு இருக்கிறான் என்கிற செய்தியைக் கேட்டபோது யாக்கோபின் ஆவி உயிர்த்தது (ஆதி 45:26).

  யோசேப்பு உயிரோடு இருக்கிறான் என்கின்ற செய்தி மாத்திரமல்ல, யாக்கோபுடைய ஆவி உயிர்த்தது என்பதும் உயிர்த்தெழுதலுக்கு நிழற்படமாக இருக்கிறது.
- ஆரோனின் உலர்ந்த கோல் துளிர்விட்டு பூத்து வாதுமை பழங்களைத் தந்தது (எண் 17:8). இப்படி பல நிகழ்வுகள் வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டில் இருக்கின்றன எனவே, மீண்டும் செத்துப்போன ஒன்று அல்லது செத்துப்போன ஒருவர் மீண்டும் உயிர்த்தெழுவார் என்பது வேதாகமத்தினுடைய போதனையாக இருக்கிறது.
- ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாய் இருக்கிறேன் (யாத் 3:6) என்று ஆண்டவர் சொல்லுகிறார். இது இறந்துபோன ஆபிரகாமுக்கு மீண்டுமாக என்னோடு பங்கு இருக்கிறது என்பதற்கான அத்தாட்சியாக இருக்கிறது.

**c. உயிர்த்தெழுதல் பற்றிய உறுதியை பெற்றிருந்த பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள்**

- மரித்துப்போன தன்னுடைய கணவரையும் இரு குமாரரையும் கருத்தில் கொண்டிருந்த <u>நகோமி</u> அவளுடைய மருமகளாகிய ரூத்திடம்: 'உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தவர்களுக்கும் தயவுசெய்கிற கர்த்தர்' என்கிறாள் (2:20). மரித்தவர்களுக்கு எப்படி தயவு செய்வார்? அவர்கள் பின்னர் உயிரோடு எழுப்பப்படுவார்கள் என்பதுதான் அதனுடைய பொருள்.
- கர்த்தாவே உம்முடைய இரட்சிப்புக்கு காத்திருக்கிறேன் என்று கூறி <u>யாக்கோபு</u> மரித்தார் (ஆதி 49:18).
- <u>பிலேயாம்:</u> நீதிமான் மரிப்பது போல் நான் மரிப்பேனாக, என் முடிவு அவன் முடிவுபோல் இருப்பதாக என்றான் (எண் 23:10). அப்படியென்றால் நீதிமானுக்கு உயிர்த்தெழுதல் பற்றிய ஒரு நம்பிக்கை இருக்கிறது என்பதை அவர் அதன் மூலமாக சொல்கிறார்.
- <u>யோபு:</u> ஒருநாள் என்னுடைய மீட்பரை என்னுடைய சொந்த கண்ணால் காணுவேன் என்று சொல்லி தன்னுடைய மீட்பை பற்றி அதாவது உயிர்த்தெழுதலை குறித்து ஒரு நம்பிக்கையை அவர் வெளிப்படுத்தினார் (யோபு 19:23–27).
- <u>தாவீது:</u> என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்; உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர் (சங்கீதம் 16:10). இந்த வார்த்தையைத்தான் பெந்தேகோஸ்தே நாளிலே பேதுரு மேற்கோள் காட்டுகிறார் (அப் 2:27). நானோ நீதியில் உம்முடைய முகத்தைத் தரிசிப்பேன்; நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன் (சங்கீதம் 17:15) என்று சொல்லி இருக்கிறார்.

- <u>ஏசாயா:</u> மரித்த உம்முடையவர்கள் பிரேதமான என்னுடையவர்களோடேகூட எழுந்திருப்பார்கள்; மண்ணிலே தங்கியிருக்கிறவர்களே, விழித்துக் கெம்பீரியுங்கள்; உம்முடைய பனி பூண்டுகளின்மேல் பெய்யும் பனிபோல் இருக்கும்; மரித்தோரைப் பூமி புறப்படப் பண்ணும் (ஏசாயா 26:19) என்று எழுதி வைத்திருக்கிறார்.
- <u>தானியேல்:</u> பூமியின் தூளிலே நித்திரைபண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்தியஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள் (தானியேல் 12:2) என்று வாசிக்கிறோம்.

எனவே பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களுக்கும் கூட உயிர்த்தெழுதலை பற்றிய ஒரு சிந்தனை இருந்திருக்கிறது என்பதை நாம் இந்த வார்த்தைகள் மூலமாக புரிந்து கொள்ளுகிறோம்.

**d. உயிர்த்தெழுதல் புதிய ஏற்பாட்டு நிகழ்வுகளில் அல்லது போதனைகளில்**

a. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சதுசேயருக்கு அளித்த பதில்: மத்தேயு 22:23–33; அதே நிகழ்வு மாற்கு 12:18–27 வரை உள்ளது.

உயிர்த்தெழுதல் இல்லை என்று சாதிக்கிற சதுசேயர்களிடம் கிறிஸ்து சொல்லும்போது: மேலும் மரித்தோர் உயிர்த்தெழுதலைப்பற்றி: நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருக்கிறேன் என்று தேவனால் உங்களுக்கு உரைக்கப்பட்டிருக்கிறதை நீங்கள் வாசிக்கவில்லையா? (மத் 22:31) என்று பழைய ஏற்பாட்டு மேற்கோளை எடுத்துக்காட்டுகிறார். மட்டுமல்ல தேவன் மரித்தோருக்கு தேவனாயிராமல், ஜீவனுள்ளோருக்கு தேவனாயிருக்கிறார் என்றார் (மத் 22:32) எனவே மரித்தோருக்கு அவர் தெய்வமாக இருப்பது பெரிய விஷயமல்ல; அவர் ஜீவனுள்ளோர்க்கு தேவனாக இருக்கிறார் என்பது மரித்தோர் உயிரோடு எழுந்திருப்பார்கள் என்பதை காட்டுகிறது.

b. பவுலின் வார்த்தைகள்: (1 கொரி 15)

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் முக்கியத்துவத்தை குறிப்பிடுகிறார். கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தாரென்று பிரசங்கிக்கப்பட்டிருக்க, மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லையென்று உங்களில் சிலர் எப்படிச் சொல்லலாம்? மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால் கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லையே. கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா. மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், தேவன் எழுப்பாத கிறிஸ்துவை அவர் எழுப்பினாரென்று நாங்கள் தேவனைக்குறித்துச் சாட்சிசொன்னதினாலே, தேவனுக்காகப் பொய்ச்சாட்சி சொல்லுகிறவர்களாகவும் காணப்படுவோமே. மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை. கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள். கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே (1கொரி15:12–18).

- கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலானது இப்பொழுது வாழுகிற நாமும் பாவத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு அது ஒரு ஆதாரமாக இருக்கிறது.

- கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே என்று சொல்லுகிறார். நம்முடைய விசுவாசமும் விருதாவாயிருக்குமே!
- தேவனுக்காகப் பொய்ச்சாட்சி சொல்லுகிறவர்களாகவும் காணப்படுவோமே என்று சொல்லுகிறார்.

ஆக, எல்லாவற்றுக்கும் அடித்தளமாக இருப்பது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலே! ஆகவேதான், அப்போஸ்தலர்களுடைய செய்திகளில்கூட கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மிக முக்கியமான ஒரு சாட்சியாக இடம்பெற்றது.

மரித்த கிறிஸ்து உயிரோடு இருக்கிறார் என்று சொன்னதர்க்காகத்தான் சீஷர்கள் துன்புறுத்தப்பட்டார்கள். அரசாங்கம் மற்றும் யூத மதத்தலைவர்கள் இப்படி எல்லாத் தரப்பிலிருந்தும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை மறுக்கிற பல போராட்டமான எதிர்வாதங்கள் வந்தபொழுதும் துன்புறுத்தல்கள் வந்தபோதும்கூட கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு அப்போஸ்தலர்கள் சாட்சிகளாக நின்றனர்.

## 2. கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பியவர் யார்?

இயேசு கிறிஸ்துவினுடைய பல நிகழ்வுகளில் திரியேக தேவனுடைய செயல்பாடுகள் இருப்பதை காணலாம். அவருடைய பிறப்பிலே... ஞானஸ்நானம் பெற்ற வேளையிலே... இப்படி பல இடங்களிலும் பார்க்கலாம். இவைகளில் நாம் தனித்தனியாக பகுத்துப்பார்க்கக்கூடிய வகையில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரின் செயல்கள் குறிப்பிடப்பட்டிருக்கும்.

### கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் திரித்துவம்

**தேவனுடைய பங்கு**

- என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்; உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர் (சங்கீதம் 16:10) என்று சொல்லப்பட்டுள்ளது.
- மூன்றாம் நாளிலே தேவன் அவரை எழுப்பிப் பிரத்தியட்சமாய்க் காணும்படிசெய்தார் (அப் 10:40).
- தேவனோ அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார் (அப் 13:30)
- தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார் (ரோமர் 1:5)
- பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல (ரோமர் 6:4)

இந்த எல்லா இடங்களிலும் பிதாவாகிய தேவனே கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று திட்டமும் தெளிவிமாக சொல்கின்றன;

**குமாரனுடைய பங்கு**

அதே நேரத்தில் இந்த சத்தியத்தை சற்றேனும் மறுக்காத வகையில் வேறு சில வசனங்களும் இருக்கின்றன கிறிஸ்துவானவர் தாமே மரித்தோரிலிருந்து உயிரோடு இருந்தார் என்பதை சுட்டிக்காண்பிக்கக்கூடிய வசனங்கள்:

- இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன் (யோவான் 2:19); அவரோ தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக்குறித்துப் பேசினார் (யோவான் 2:21). எனவே அவர் தாமே உயிரோடு கூட எழுந்திருப்பார்.
- நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார். ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரமுண்டு. இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்டேன் (யோவான் 10:17,18) என்று சொல்கிறார். ஆக, அவர் தம்மில்தாமே உயிரோடு எழும்பக்கூடிய வல்லமை பெற்றவராக இருக்கிறார்.

**<u>பரிசுத்த ஆவியானவரின் பங்கு</u>**

- அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார் (ரோமர் 8:11) இவ்வசனத்தில் ஆவியானவருடைய பங்கு இருப்பதை அறியமுடியும்.

எனவே திரித்துவத்தின் செயல்பாடுகள் அடங்கிய ஒன்றுதான் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதல்.

## இயேசுகிறிஸ்து மட்டுமே உயிரோடு எழுந்தாரா?

கிறிஸ்துவுக்கு முன்பாக நிறைய பேர் உயிரோடு எழுந்திருந்திருக்கிறார்கள். அவரும் மூன்று பேரை உயிரோடு எழுப்பியிருக்கிறார். பேதுரு மற்றும் பவுலும் சிலரை உயிரோடு எழுப்பியிருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து சிலுவையில் மரிக்கும்போதுகூட சில பேர் உயிரோடு எழுந்ததாக மத் 27:52ல் வாசிக்கிறோம். **இவர்களுடைய உயிர்த்தெழுதலுக்கும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?**

- நித்திரை அடைந்த பரிசுத்தவான்கள் உயிரோடு எழுந்தார்கள் ஆனால் இவர்கள் கிறிஸ்து உயிரோடு எழுந்த பின்னர்தான் அனேகருக்கு காணப்பட்டார்கள் (மத் 27:53) எனவே கிறிஸ்து உயிர்த்தெழுந்தலில் முதற்பலனானார் என்று சொல்லலாம்.
- லாசரு, விதவையின் மகன், யவீருவின் மகள், ஐத்திக்கு, தொற்காள் இவர்களெல்லாரும் எழுப்பப்பட்டாலும் கூட மீண்டும் அவர்கள் மரித்தார்கள்.
- அவர்கள் உயிரோடு எழுப்பப்பட்டபோது பழைய சரீரத்தோடுதான் உயிரோடு எழுந்தார்கள் ஆனால், இயேசுகிறிஸ்து உயிரோடு எழுப்பப்பட்டபோது அவர் மகிமையின் சரீரத்தை பெற்றவராக உயிரோடு எழுந்தார்.

எனவே உயிர்த்தெழுந்தவர்களில் மகிமையின் சரீரத்தோடு எழுந்தது அவர் மட்டும்தான் ஆகவே அவர் முதற்பலன் ஆனார். இந்த மகிமையின் சரீரத்தை ஏற்கனவே அவர்

மறுரூபமலையில் தன்னுடைய சீஷர்களுக்கு முன்னடையாளமாக காண்பித்திருக்கிறார். எனவே, கர்த்தராகிய இயேசுவினுடைய உயிர்த்தெழுதல் மற்ற எல்லாருடைய உயிர்த்தெழுதலை காட்டிலும் வித்தியாசமானது; தனித்துவம் வாய்ந்தது.

1. அவர் தம்முடைய உயிர்த்தெழுதலை குறித்து முன்னறிவித்தார் அல்லது முன்னறிந்திருக்கிறார் எனவே அவர் தெய்வம் (லூக்கா 9:22)
2. அவர் தம்மில்தாமே உயிரோடு எழுந்தார். மற்றவரெல்லாரும் எழுப்பப்பட்டனர் ஆனால் கிறிஸ்துவோ தாமே எழுந்தார் (யோவான் 10:18)
3. அவர் மட்டும்தான் மீண்டும் மரணத்திற்கு உட்படமுடியாத ஒரு மகிமையின் சரீரத்தோடு உயிரோடு எழுந்தவர்களில் முதல்வர் (கொலோ 1:18) அதேபோன்ற சரீரங்களைதான் நாமும் பெற்றுக்கொள்ளப்போகிறோம்.

இந்த மூன்று காரியங்களை நாம் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும்.

## 3. இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் பற்றிய சில தவறான கொள்கைகள்

### a. Theft theory (திருட்டு கோட்பாடு) – மத்தேயு 28:11–15

பிரதான ஆசாரியர்கள் மூப்பரோடே கூடிவந்து, ஆலோசனைபண்ணி, சேவகருக்கு வேண்டிய பணத்தைக் கொடுத்து: நாங்கள் நித்திரைபண்ணுகையில், அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டு போய்விட்டார்கள் என்று சொல்லுங்கள் (வச. 12,13).

**இதற்கான வேதாகம மறுப்பு:**

i. லூக்கா 24:12 – சீலைகளைத் தனிப்பட வைத்திருக்கக்கண்டு;
யோவான் 20:5 – சீலைகள் கிடக்கிறதைக் கண்டான்;

கிடக்கிறது என்பதற்கு கிரேக்க மொழியில் 'படுத்திருத்தல்' போன்ற ஒரு வார்த்தைதான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு பிணத்தை படுக்க வைத்தபிறகு அந்தப் பிணம் அதற்குள்ளிருந்து வெளியே போனால் அந்த துணி மட்டும் எப்படி இருக்குமோ அந்த நிலையில்தான் இருந்தது. இதை வைத்துதான் கிறிஸ்துவின் சரீரம் திருடப்படவில்லை; அவர் உயிர்த்தெழுந்தார் என்று நாம் விசுவாசிக்கிறோம். இயேசுவின் சரீரம் உயிர்த்தெழுந்தால் மட்டுமே அந்த சுற்றப்பட்ட சீலைகள் அப்படியே இருக்க முடியும்.

ii. அந்தக் கொள்கை தவறு என்பதற்கு இன்னொரு குறிப்பு: நாங்கள் நித்திரைபண்ணுகையில், அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டு போய்விட்டார்கள் (மத் 28:13). இந்த உலகத்தில் எந்த ஒரு நீதிமன்றமும் தூங்கிட்டு இருந்தவனுடைய வாதத்தை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அது அப்பட்டமான பொய் என்பது தெரிகிறது காரணம் தூங்கிட்டு இருந்தவனுக்கு திருடனை எப்படித் தெரியும்

iii. அந்தக் கொள்கை தவறு என்பதற்கு இன்னொரு குறிப்பு: கல்லறை வாசலில் ரோம முத்திரை இடப்பட்ட ஒரு பெரிய கல் வைக்கப்பட்டிருந்தது (மத் 27:60,66). அதை இரண்டு மூன்று

நபர்களால் நகர்த்த முடியாது. அரசாங்க ஊழியர்கள் அநேகரை கொண்டு ஒரு தண்டவாளம் போன்ற அமைப்பை ஏற்படுத்தி நகர்த்துவார்கள்.

iv. அதுமட்டுமல்ல இயேசுகிறிஸ்துவின் சீடர்களுக்கும் அவ்வளவு தைரியம் கிடையாது. அவர் மரித்த பின்பு பயந்தவர்களாக பூட்டிய அறைக்குள்தான் இருந்தார்கள். அதுபோல ரோமர்களுடைய காவலில் இருக்கக்கூடிய ஏதோ ஒன்றை திருடினால் அதற்கு எவ்வளவு பெரிய தண்டனை இருக்கும் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

**b. <u>மயக்க கொள்கை:</u>**

இந்தக் கொள்கையின்படி இவர்கள் சொல்வது: இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைந்தபோது அவருக்கு உணர்வு இருந்தது; வேதனை இருந்தது; இரத்தம் வடிந்தது… அதனால் அவர் அதிகமான சோர்வினால் மயங்கிப்போன நிலையில் கல்லறையில் உயிருடன் இருந்தார்; அவர் சாகவில்லை. பிறகு பல மணி நேரங்கள் கழித்து மயக்கம் தெளிந்து எழுந்து அந்த கல்லறையை மூடி இருந்த கல்லை புரட்டிபோட்டுவிட்டு வெளியே வந்தார் என்று சொல்லுகிறார்கள். அவர் சிலுவையில் 6 மணி நேரம்தான் தொங்கினார். அந்த ஆறு மணி நேரத்தில் அவர் மரித்தார் என்பது நிச்சயம். இயேசு கிறிஸ்து உயிரோடு எழுந்தார் என்பதைவிட, சிலுவையில் அறையப்பட்டு இரத்தம் வடிந்து சோர்வடைந்து மயக்கத்திலேபோன ஒருவர் மூன்று நாட்களுக்கு பிறகு மயக்கம் தெளிந்து எழுந்து அந்தக் கல்லைப்புரட்டித் தள்ளிவிட்டு வெளியே வந்தார் என்றால்… அது அவர் உயிர்த்தெழுந்தார் என்பதை விட எவ்வளவு பெரிய அதிசயம். எனவே அந்த கொள்கையை நாம் மறுக்கிறோம்.

**<u>இதற்கான வேதாகம மறுப்பு:</u>**

i. அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து, அவர் மரித்திருக்கிறதைக் கண்டு, அவருடைய காலெலும்புகளை முறிக்கவில்லை (யோவான் 19:33).

ii. ஆகிலும் போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான்; உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது (யோவான் 19:34). இது வழக்கமாக ஒரு மனிதனுடைய மரணத்தை உறுதி செய்யும் முறையாகும். இயேசு கிறிஸ்து மரித்தார் என்பதை உறுதி செய்தார்கள்.

iii. அவர் இத்தனை சீக்கிரத்தில் மரித்துப்போனாரா என்று பிலாத்து ஆச்சரியப்பட்டு, நூற்றுக்கு அதிபதியை அழைப்பித்து: அவர் இதற்குள்ளே மரித்தது நிச்சயமா என்று கேட்டான். நூற்றுக்கு அதிபதியினாலே அதை அறிந்துகொண்டபின்பு, சரீரத்தை யோசேப்பினிடத்தில் கொடுத்தான் (மாற்கு 15: 44, 45). ஆளுநர் பிலாத்து நூற்றுக்கு அதிபதியிடம் மரணத்தை உறுதிப்படுத்திய பின்புதான் செத்துப்போன கிறிஸ்துவின் சரீரத்தை யோசேப்பிடம் கொடுத்தான்.

iv. அதுமட்டுமில்லாமல் யூதர்களின் கருத்து: ஆண்டவனே, அந்த எத்தன் உயிரோடிருக்கும்போது, மூன்று நாளைக்குப் பின் எழுந்திருப்பேன் என்று சொன்னது எங்களுக்கு ஞாபகமிருக்கிறது (மத் 27:63) என்று சொல்லுவதினாலே அந்நேரம் அவர்

உயிரோடு இல்லை என்றுதானே அர்த்தமாகிறது. யூதர்களுடைய கருத்திலேயே இயேசுவின் மரணம் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

v. மேலும் சுற்றப்பட்ட சீலை: அவருடைய சரீரத்தை சுற்றியிருந்த சீலைகள் வாசனை திரவியங்களோடு சேர்ந்து மொத்த எடை ஏறக்குறைய 30 லிருந்து 35 கிலோ வரை இருக்கும். ஒரு சாதாரண மனிதனால் அந்தத் துணிகளை தானே அவிழ்த்துக்கொண்டு வெளியே வரமுடியாது. இதற்கு நல்ல உதாரணம் லாசரு உயிரோடு எழுந்த நிகழ்ச்சியைக்கூட நாம் ஒப்பிட்டுப்பார்க்கலாம் (யோவான் 11). அவன் உயிரோடு எழுப்பப்பட்டு வெளியே வருகிறான் ஆனாலும் அவனை சுற்றியிருந்த துணிகளை கழற்றி கொள்ளமுடியாத நிலையில் இருந்ததினால்தான் அதை அவிழ்க்கச்சொல்லுகிறார். ஆகவே அவர் மயங்கி இருந்தார்; அவருடைய மயக்கம் தெளிந்து வெளியே வந்துவிட்டார் என்கிற மயக்க கொள்கையை நாம் மறுக்கிறோம்.

**C. <u>தவறான கல்லறை கொள்கை:</u>**

மகதலேனா மரியாள் கிறிஸ்துவின் மரணத்தை நினைத்து அழுது அழுது அவளுடைய கண்கள் கண்ணீர்களாலே மறைக்கப்பட்டு இருந்ததால் திறந்து இருந்த வேறு ஒரு தவறான கல்லறைக்கு போனதாக சொல்லுகிறார்கள்.

**<u>இதற்கான வேதாகம மறுப்பு:</u>** கிறிஸ்துவை அடக்கம் செய்தபோது மகதலேனா மரியாள் கூர்ந்து கவனித்தார்கள். அங்கே மகதலேனா மரியாளும், மற்ற மரியாளும் கல்லறைக்கு எதிராக உட்கார்ந்திருந்தார்கள் (மத் 27:61). சில ஸ்திரீகளும் தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர் கலிலேயாவிலிருந்தபோது அவருக்குப் பின்சென்று, ஊழியஞ்செய்துவந்த மகதலேனா மரியாளும், சின்ன யாக்கோபுக்கும் யோசேக்கும் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும்... (மாற்கு 15:40) இயேசு கிறிஸ்துவுக்கு என்ன நடக்கிறது என்பதையும் பார்த்துக்கொண்டு இருந்தார்கள். அவரை வைத்த இடத்தை மகதலேனா மரியாளும், யோசேயின் தாயாகிய மரியாளும் பார்த்தார்கள் (மாற்கு 15:47). பொதுவாகவே பெண்களின் சாட்சியை யூதர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஆனால், பேதுருவும் யோவானும் கல்லறையினிடத்திற்கு ஓடினார்கள் அப்பொழுது மகதலேனா மரியாளும் ஓடினார்கள் என்று சொல்லி சொல்லப்படவில்லை.

i. பேதுருவும் யோவானும் தவறான கல்லறைக்கு ஓடி இருப்பார்களா?

ii. அது பொதுவான கல்லறை அல்ல; யோசேப்பின் கல்லறை. தான் கன்மலையில் வெட்டியிருந்த தன்னுடைய புதிய கல்லறையிலே அதை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டிவைத்துப்போனான் (மத் 27:60; யோவான் 19:38–41).

iii. அது மட்டுமல்ல ரோம போர்ச்சேவகர்கள் தவறான கல்லறையை பாதுகாக்க வேண்டிய அவசியம் இல்லையே!

iv. தேவ தூதர்களும் தவறான கல்லறையில்போய் உட்காரவில்லை.

v. இப்போதும்கூட யார் வேண்டுமானாலும் போய் பார்த்துக்கொள்ளலாம். அந்தக் கல்லறை தவறான கல்லறை அல்ல; இன்றைக்கும் அது திறந்துதான் இருக்கிறது. எனவே தவறான கல்லறை என்கிற கொள்கையை நாம் மறுக்கிறோம்.

## 4. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் ஆதாரங்கள்

### a. <u>உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் தரிசனங்கள்</u>

i. இயேசுகிறிஸ்து உயிரோடு எழுந்த பிறகு …அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார் (அப் 1:3)

ii. வாரத்தின் முதலாம்நாள் அதிகாலையிலே இயேசு எழுந்திருந்தபின்பு, மகதலேனா மரியாளுக்கு முதல்முதல் தரிசனமானார் (மாற்கு 16:9; யோவான் 20:14–17)

iii. தன்னுடைய சீடர்களுக்கு பலமுறை அவர் தரிசனம் அளித்திருக்கிறதை பவுல் குறிப்பிடுகிறார். ஒரே முறை 500க்கும் மேலானவர்கள் தரிசிக்ககூடிய ஒரு பெரிய தரிசனத்தையும் அவர் கொடுத்திருக்கிறார் (1 கொரிந்தியர் 15:5,6).

iv. அதைப்போல அவர் பரமேறும்போதும் திரளான மக்கள் அவரை பார்த்தார்கள் (அப் 1:11)

**<u>அவர் பரமேறிய பின்பும் அவர் காட்சி அளித்திருக்கிறார்.</u>**

i. பவுலாகிய சவுலுக்கு அவர் தரிசனமானார் ( அப் 9). அதே பவுலுக்கு அரபி தேசத்திலே தரிசனமானார் (கலா 1:12,17)

ii. நான் எருசலேமுக்குத் திரும்பிவந்து, தேவாலயத்தில் ஜெபம்பண்ணிக்கொண்டிருக்கையில், ஞானதிருஷ்டியடைந்து, அவரைத் தரிசித்தேன் (அப் 22:17)

iii. அன்று இராத்திரியிலே கர்த்தர் பவுலின் அருகே நின்று: பவுலே, திடன்கொள்; நீ என்னைக்குறித்து எருசலேமில் சாட்சிகொடுத்ததுபோல ரோமாவிலும் சாட்சிகொடுக்கவேண்டும் என்றார் (அப் 23:11)

iv. கண்டேன், கண்டேன் என்கிற வார்த்தைகள் மூலமாக அவர் யோவானுக்கு தரிசனம் அளித்திருக்கிறார் (வெளி 1:12–20) என அறியலாம்.

எனவே இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுந்த பிந்திய தரிசனங்களும் அவர் உயிர்த்தெழுந்ததற்கான சான்றுகள் ஆகும்.

### b. <u>காலியான கல்லறை</u>

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கான சான்றுகளில் அவருடைய காலியான கல்லறை ஒரு மிக முக்கிய இடத்தை வகிக்கிறது. மத்தேயு 28ஆம் அதிகாரத்திலும் யோவான் 20 ஆம் அதிகாரத்திலும் இவை இன்னும் கூட கொஞ்சம் விரிவாக சொல்லப்பட்டிருக்கின்றன.

i. கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்தலுக்கு பிறகு அந்த கல்லறை காலியாக இருந்தது என்பதற்கு ஏராளமான சான்றுகள் இருந்தாலும் சேவகர்கள் அந்த இடத்தை விட்டுப்போய்விட்டனர் (மத் 28:11).

ii. தூதர்களை கண்ட அந்த சேவகரின் நடுக்கமும்கூட அவர் உயிர்த்தெழுந்தலுக்கான ஒரு சாட்சி ஆகும். அவர்கள் செத்தவர்கள் போலானார்கள் என்று பார்க்கிறோம் (மத் 28:4).
iii. யோவான் 20:7–12இல்... இடத்தை கண்டார்கள், சீலைகளை கண்டார்கள், தூதர்களை கண்டார்கள் என்ற பதிவு இருக்குமே தவிர கல்லறையில் இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் இருப்பதாக எந்த ஒரு பதிவும் இல்லை ஏனென்றால் அவர் உயிரோடு எழுந்து விட்டார்.
iv. தூதன் கல்லை புரட்டியதற்கு காரணம் கிறிஸ்து வெளியே வருவதற்காக இல்லை; நாம் உள்ளே போய் பார்க்கவே!

உங்கள் அனைவருக்கும் நான் ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். உலக வரலாற்றிலேயே மரணத்தைவென்று உயிரோடு எழுந்த ஒருவரை குறித்து நீங்கள் கேள்விப்பட்டுக்கொண்டிருக்கிறீர்கள். இப்போதும்கூட போய் அவருடைய கல்லறையை போய் பாக்கலாம். "அவர் இங்கே இல்லை அவர் உயிர்த்தெழுந்தார்" என்ற வாசகம் உலகத்தில் வேறு எந்த ஒரு மனிதனுடைய கல்லறையிலும் இப்படி எழுதப்படவில்லை. அவர் ஏன் உயிர்த்தெழுந்தார்? அடக்கம் பண்ணப்பட்டதினாலே... ஏன் அடக்கம் பண்ணப்பட்டார்? அவர் மரித்ததினாலே... ஏன் மரித்தார்? மரணத்தில் இருந்து நம்மை மீட்பதற்காக... எந்த மரணத்திலிருந்து? மரணம் என்றால் பிரிவு. நித்திய நித்தியமாக இறைவனை விட்டு மனிதன் பிரிந்து நரகத்தண்டனைக்கு ஆளாகிவிடக்கூடாது என்பதற்காக இயேசுக்கிறிஸ்து மனிதராக வாழ்ந்து பாவமற்ற தன்னுடைய உதிரத்தை கல்வாரி சிலுவையிலே பாவிகளாகிய நமக்காக சிந்தி மரித்தார். அவர் மரித்தது குறித்து வேதம் சொல்கிறது: ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார் (எபி 2:14,15). இந்த இயேசு கிறிஸ்துவுக்கு உங்களுடைய வாழ்க்கையை ஒப்புக்கொடுத்தால் நீங்களும் உயிர் பயத்தில் இருந்து விடுதலையாவீர்கள்.

## 5. கிறிஸ்துவின் உயிர்தெலுதலால் சீடர்களின் வாழ்வில் ஏற்பட்ட வியத்தகு மாற்றம்

உயிர்த்தெழுதலின் சத்தியத்தை தொடக்கத்தில் சீஷர்கள் புரிந்துகொள்ளவில்லை. அவருடைய சரீரம் காணாமல்போனபோது அவர் உயிர்த்தெழுந்துவிட்டார் என்று அவர்கள் விசுவாசித்திருக்கவேண்டும். ஆனால் அவர்கள் அதை நம்பவில்லை. பின்னாட்களில் அந்த உயிர்த்தெழுதலை அவர்கள் அறிந்த பிறகு... ஆண்டவர் இயேசு கிறிஸ்து பல தரிசனங்களில் அவர் தம்மை உயிரோடு இருக்கிறவராக காண்பித்தப்பிறகு அவர்களின் வாழ்க்கை அப்படியே தலைகீழாக மாறியது. இயேசுவின் மரணத்திற்கு பிறகும்கூட பூட்டிய அறைக்குள் இருந்து பயந்துகொண்டிருந்தவர்களாகதான் இருந்தார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை உறுதிசெய்துகொண்டபிறகு அதற்காகவே வாழ்ந்தனர்; அந்த

உயிர்த்தெழுதலின் செய்தியை அவர்கள் போய் சொல்லும்போது தங்கள் உயிரைக் கொடுப்பதற்கும்கூட தயாராக இருந்தார்கள். வேறு எதுவும் மனிதனுடைய வாழ்க்கையில் இந்த மாற்றத்தை ஏற்படுத்த முடியாது.

இன்றும் கிறிஸ்தவர்கள் என்று அறியப்படுகிற ஏராளமான மக்களுடைய ஒரே நம்பிக்கைக்கு காரணம் "என் மீட்பர் உயிரோடு இருக்கிறார்" என்பதே!

<u>பெந்தேகோஸ்தே நாள் பிரசங்கத்தில்</u> இயேசுவினுடைய உயிர்த்தெழுதலின் செய்திதான் முதன்மையான இடத்தைப் பெறுகிறது (அப் 2:23–32).

<u>வாரத்தின் முதல் நாள் கூடுகை:</u> ஆதி கிறிஸ்தவர்கள் ஓய்வு நாளை வாரத்தின் முதல் நாளாக மாற்றிவிட்டார்கள். வாரத்தின் முதல் நாளில் ஏதோ ஒன்று நடந்தது; அதனாலதான் அவர்கள் அந்த நாளை மாற்றினார்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்தான் இவர்களை யூதர்களில் இருந்து வேறுபட்டவர்கள் என காண்பிக்க கருவியாக இருந்தது.

<u>சபையின் நிலைப்பாடு:</u> மூன்றரை ஆண்டுகள் மட்டுமே ஊழியம் செய்த இயேசுகிறிஸ்துவினுடைய அந்த ஊழியம் இன்னும் தொடர்வது அவர் உயிரோடு இருக்கிறார் என்பதற்கான ஆதாரம் ஆகும்.

## 6. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் விளைவுகள்:

i. கர்த்தராகிய <u>இயேசு கிறிஸ்து ஒரு உண்மையான மனிதர்</u> என்பது இந்த உயிர்த்தெழுதல் மூலமாக உறுதிப்படுகிறது ஏனென்றால் அவர் மரித்தார் காரணம் மனிதனுக்குத்தான் மரணம் ஏற்படும். எனவே அவர் மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்தார் என்பது அவருடைய மனிதத்தன்மையை காட்டுகிறது.

ii. இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்படும்போது நீ தேவகுமாரனேயானால் கீழே இறங்கி வா என்று சொல்லி அவருடைய வல்லமைக்கு சவால் விடப்பட்டது ஆனால் ஒருவேளை அவர் அப்பொழுது இறங்கி வந்திருந்தால்நமக்கு இரட்சிப்பு கிடைத்திருக்காது ஆனால் அவர் அப்பொழுது அந்த வல்லமையை பயன்படுத்தாமல் உயிர்த்தெழுதலில் அந்த வல்லமையைப் பயன்படுத்தி தாமே <u>தேவகுமாரன் என்று அவர் உறுதிப்படுத்தினார்.</u>

iii. அவரின் உயிர்த்தெழுதல் <u>இயேசு கிறிஸ்து இந்த பூமிக்கு வந்த அந்த நோக்கம் முற்றிலும் நிறைவேறியதை உறுதி செய்கிறது.</u> பிறப்பில் அவர் இரட்சகர் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும் விரோதிகளின் கரங்களிலே அவர் பிடிபட்டு சிலுவையில் அறையப்பட்டார்; அப்போது இழிவான சொற்களையெல்லாம் அவர் மீது சொல்லுகிறார்கள் ஆனாலும் அவர் தம்முடைய திருநோக்கம் நிறைவேற வேண்டும் என்பதற்காக அவர் அமைதியாக இருந்தார். தமக்குமுன் வைக்கப்பட்டிருந்த சந்தோஷத்தின் பொருட்டு அவமானத்தை எண்ணாமல் சிலுவையை சகித்தார். அவருடைய உயிர்த்தெழுதலில் இரட்சிப்பின் பணி நிறைவு பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

iv. அவரின் உயிர்த்தெழுதல் <u>கிறிஸ்து மகிமை அடைய அவரை தகுதியாக்கிற்று</u>. கிறிஸ்து இவ்விதமாகப் பாடுபடவும், தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா என்று சொல்லி… (லூக்கா 24:26). ஆக பாடுபட்ட பிறகுதான் அவர் மகிமைப்படவேண்டும்; எனவே அவர் மகிமை அடைவதற்கு அந்த உயிர்த்தெழுதல் அவரை தகுதியாக்கிவிட்டது.

v. <u>கிறிஸ்துவே அனைத்துலகத்திற்கும் ஆண்டவர்</u> என்பதை அவருடைய உயிர்த்தெழுதல் தெரிவிக்கிறது (அப் 2:36;10:36; ரோமர் 10:9)

vi. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் <u>அவர் இஸ்ரவேலின் நம்பிக்கையாக உள்ள மேசியா என்ற தகுதியை அவருக்கு தருகிறது</u>. அவருடைய மரணம் சாத்தான்மீது அவருக்கு வெற்றியை கொடுத்தாலும் அவருடைய உயிர்த்தெழுதல்தான் தேவனுடைய சர்வ வல்லமையை வெளிப்படுத்தி இஸ்ரவேலுடைய விடுதலையையும் இந்த பூமியில் நீதியின் ஆட்சியை நிலைநாட்ட போவதும் உறுதி செய்கிறது. தாவீதுக்கு அளிக்கப்பட்ட இறைவாக்கு நிறைவேற்றுவதற்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உயிரோடு எழ வேண்டி வருகிறது. அவரே இஸ்ரவேலர் எதிர்நோக்கியிருக்கும் மேசியா என்பதை இயேசுவின் உயிர்த்தெழுதல் உறுதி செய்தது.

vii. உயிர்த்தெழுதலில் வெளிப்பட்ட <u>தேவவல்லமை அநேகரின் வாழ்க்கையை மாற்றி நித்திய ஜீவனை அளித்து இறையடியாராக்கி வருகிறது</u>. யூத மதத் தலைவர்கள் உள்ளிட்ட பல பேர் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு பிறகு அவருடைய தெய்வத்தன்மையை அதாவது அவர்தான் மேசியா என்பதை அங்கீகரித்தார்கள் (அப் 6:7).

viii. <u>பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை அனுப்பவும் அவர் தகுதி பெறுகிறார்.</u> இறந்துபோன ஒருவரால் பரிசுத்த ஆவியானவரை அனுப்பமுடியாது. நான் போய் தேற்றரவாளனை அனுப்புவேன் என்று சொன்னதை நிறைவேற்ற அவருடைய உயிர்த்தெழுதல் அவசியமாகிறது.

ix. எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில்மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக, அவரை உன்னதங்களில் தம்முடைய வலதுபாரிசத்தில் உட்காரும்படி செய்து, எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார் (எபே 1:20–23). <u>அவருடைய உயிர்த்தெழுதல்தான் எல்லாவற்றுக்கும் மேலான அதிகாரத்தை அவருக்கு தருகிறது.</u>